

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 286 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 13– சனிக்கிழமை 27 மே 2023 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 286 : Thiruvalluvar Year - 2054 - Vaikasi 13 - Saturday 27 May 2023 - Chennai 16 Pages ₹ 5.00


## தெற்காசியாவிலேயே முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாக

# தமிழ்நாட்டை உயர்த்துவோம்!

## ஜப்பான் - ஒசாகாவில் நடைபெற்ற ‘உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில்’ முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**ஒசாகா, (ஜப்பான்) மே 27-**

**“இந்தியாவுக்குள் தமிழ்நாடுதான் ஜப்பானிய முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாக விளங்குகிறது என்றும் தொழில் - பொருளாதார மேம்பாட்டுக்குப் பங்களிக்கும் முதலீட்டாளர்களை சிவப்புக் கம்பளம் விரித்து தமிழ்நாடு வரவேற்கும்!” என்றும் ஜப்பான் - ஒசாகாவில் நடைபெற்ற ‘உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில்’ உரையாற்றுகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

**மேலும் முதல்வர் அவர்கள் தமது உரையில், ‘தெற்காசியாவிலேயே முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்துவோம்!’ என்று சூளுரைத்தார்.**

ஜப்பான் நாட்டின் ஒசாகா நகரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டில் முதலீடுகள் மேற்கொள்வதற்கும், சென்னையில் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளவும் அழைப்பு விடுத்தார்.

அதன் விபரம் வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுடன் தமிழ்நாட்டிற்கு உள்ள பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் வகையிலும், சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கும் வகையிலும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டு 23.5.2023 அன்று சிங்கப்பூர் சென்றார்.

தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள், 24.5.2023 மற்றும் 25.5.2023 ஆகிய தேதிகளில் சிங்கப்பூர் நாட்டின் தொழில் நிறுவனங்களின் தலைமை செயல் அலுவலர்களையும், சிங்கப்பூர் நாட்டின் அமைச்சர்களையும் சந்தித்துப் பேசியதுடன், அங்கு நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டார். இதில் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.05.2023) ஜப்பான் நாட்டின், ஒசாகா மாகாணத்தில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு, தமிழ்நாட்டில் முதலீடுகள் மேற்கொள்ளவும், சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளவும் அழைப்பு விடுத்து உரையாற்றினார். இம்மாநாட்டில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, ஒசாகாவிற்கான இந்தியத் தூதர் நிகிலேஷ் கிரி, ஜப்பான் நாட்டின் முன்னணி நிறுவனங்களின் தலைமை செயல் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் (25.5.2023) காலை சிங்கப்பூரிலிருந்து புறப்பட்ட முதலமைச்சர் அவர்கள், அன்று இரவு ஜப்பான் நாட்டின் ஒசாகா நகரம் வந்தடைந்தார்.

அதன் தொடர்ச்சியாக நேற்று (26.5.2023) ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்புடன் (Japan External Trade Organization - JETRO) இணைந்து நடத்தப்பட்ட மாபெரும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டார்.

இம்மாநாட்டில் சுமார் 80 ஜப்பானிய நிறுவனங்களின் மூத்த மேலாண்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முதலமைச்சர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்திற்கும் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த டைசல் சேஃப்டி சிஸ்டம்ஸ் (Daicel Safety Systems) நிறுவனத்திற்கும் இடையே, செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூரில் உள்ள டைசல் நிறுவனத்தின் Airbag Inflator தயாரிப்பு தொழிற்சாலையை விரிவாக்கம் செய்யும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் டைசல் நிறுவனத்தின் வணிக இயக்கப் பிரிவுத் தலைவர் கென் பாண்டோ. தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, ஆகியோர் கையொப்பமிட்டனர். அப்போது டைசல் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சிஹிரோ அவோகி உடன் இருந்தார்.

இந்த முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

பரந்து விரிந்த இந்திய நாட்டின், தமிழ்நாடு என்ற தனிப்பெரும் மாநிலத்தின் முதலமைச்சராக, ஜப்பானின் ஒசாகா நகரத்துக்கு நான் வருகை தந்துள்ளேன். மிக அழகான கம்பீரமான கட்டடக் கலை மிளிரும் நகரம், ஒசாகா! அற்புதமான உணவுகள் கிடைக்கும் நகரம். நட்பைப் பேணக்கூடிய மக்கள் வாழும் நகரம். எனக்கு ஜப்பான் புதிதல்ல. உங்களுக்கு நானும் புதியவனல்ல.

சென்னை மெட்ரோ ரயில் திட்டம் மற்றும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்துக்காக ஜப்பான் நாட்டு நிதி உதவியைப் பெறுவதற்காக 2008ஆம் ஆண்டு நான் டோக்கியோ நகருக்கு வருகை தந்ததை இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்கிறேன். மெட்ரோ ரயில் திட்டமாக இருந்தாலும், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டமாக இருந்தாலும் தமிழ்நாட்டு மக்களுக்கு மிக மிக முக்கியமான திட்டங்கள். அப்போது ஜப்பானை நம்பி உதவிகள் கேட்டோம். ஜப்பான் நாடு எங்களைக் கைவிடவில்லை.

### முதலமைச்சர் கலைஞர் விடுத்த கோரிக்கை!

2010ஆம் ஆண்டு ஜப்பான் மற்றும் தமிழ்நாடு தொழில் துறை கூட்டுக் கூட்டம் சென்னையில் நடந்தது. அப்போது நான் தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராக இருந்தேன். ஜப்பான் நாட்டின் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் மசாயூகி நாஷிமா அவர்கள், அப்போது சென்னைக்கு வருகை தந்து அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பின் அலுவலகத்தை அப்போது அவர்கள் திறந்து வைத்தார்கள்.

> **இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை வடிவமைத்திடுவதில் முக்கியப் பங்காற்றிடும் விதமாக, 2030 நிதி யாண்டிற்குள், 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்றுவதற்கான ஒரு இலட்சிய இலக்கினை நிர்ணயித்து, அந்தப் பாதையில் பயணித்து வருகிறோம். கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டுமே இதுவரை 5 ஆயிரத்து 596 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 4244 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், 5 ஜப்பானிய நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளன.**

### ஆசிய நாடுகளின் நுழைவாயில் சென்னை!

இப்படி ஒரு அலுவலகத்தை சென்னையில் நீங்கள் திறக்க வேண்டும் என்று முதன் முதலாக கோரிக்கை வைத்தவர் அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான். அதனை ஏற்று அந்த அலுவலகம் சென்னையில் திறந்து வைக்கப்பட்டது. அந்தக் காலக் கட்டத்தில் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## மேலும் பல பாடப் பிரிவுகளை தமிழ்வழியில் பயிற்றுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்!

# பொறியியல் கல்லூரிகளில் தமிழ்வழி பாடப் பிரிவு நிறுத்தப்படாது!

## விழுப்புரத்தில் - உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி திட்டவட்டம்!

**விழுப்புரம், மே 27-**

**அண்ணா பல்கலைக்கழகத்தில் தமிழ்வழி பாடப்பிரிவுகள் நிறுத்தப்படாது, மேலும் பல பாடப்பிரிவுகளில் தமிழ்வழியில் படிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி குறிப்பிட்டார்.**

இதுகுறித்து அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-



அண்ணா பல்கலைக்கழகத்தில் தமிழ்வழி பாடப்பிரிவுகள் நிறுத்தப்படாது, மேலும் பல பாடப்பிரிவுகளில் தமிழ் வழியில் படிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ், தமிழ் வழியில் கல்வி கற்க வேண்டும் என்பதே திராவிட மாடல் ஆட்சியின் முதன்மையான நோக்கம். பேரறிஞர் அண்ணா காலத்தில் இருந்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கும் போது தமிழ்வழி உயர்கல்வியை பயில வேண்டும் என்பதை கொண்டு வந்தவர் . அவர் வழியில் தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ் வழியில் படிப்பதை ஊக்குவித்து வருகிறார். தமிழ்த் தாய் வாழ்த்து அரசு விழாக்களில் இசையில் ஒலித்தன, ஆனால் தற்போது அனைத்து நிகழ்ச்சிகளிலும் தமிழ்த்தாய் வாழ்த்தை அனைவரும் வாய்விட்டு பாட வேண்டும் என வலியுறுத்தியவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

பா.ஜ.க. அண்ணாமலை தமிழ்நாடு அரசு அண்ணா பல்கலைக்கழகத்தில் தமிழ் வழியில் கல்வி கற்பதை தமிழ்நாடு அரசு நிறுத்திவிட்டது என கூறியிருக்கிறார். இதற்கு அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தரே மீண்டும் தமிழ்வழி கல்வி தொடரும் என அறிவித்துள்ளார். அண்ணா பல்கலைக்கழகம் தன்னிச்சையாக அறிவித்தது அரசிற்குத் தெரியாது, துணைவேந்தரை தொடர்பு கொண்டு தமிழ்வழி கல்வி தொடர வேண்டும் என கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் அவரும் அவரது அறிக்கையை திரும்பப் பெற்றுள்ளார். சிவில் மற்றும் மெக்கானிக்கல் பாடப்பிரிவுகளை தொடர்ந்து மற்ற பாடப்பிரிவுகளிலும் தமிழ்வழியில் கற்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### மூன்றாவது மொழித் திணிப்பு!

அண்ணாமலை மாநில மொழிகளில் அக்கறை இருப்பது போல் பேசி வருகிறார். அப்படி அக்கறை இருந்தால் ஒன்றிய

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (26.05.2023) ஜப்பான் நாட்டின், ஒசாகா மாகாணத்தில், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்திற்கும் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த டைசல் சேஃப்டி சிஸ்டம்ஸ் (Daicel Safety Systems) நிறுவனத்திற்கும் இடையே, செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூரில் உள்ள டைசல் நிறுவனத்தின் Airbag Inflator தயாரிப்பு தொழிற்சாலையை விரிவாக்கம் செய்யும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் டைசல் நிறுவனத்தின் வணிக இயக்கப்பிரிவு தலைவர் கென் பாண்டோ அவர்களும், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, அவர்களும் கையொப்பமிட்டனர். இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன், ஒசாகாவிற்கான இந்தியத் தூதர் நிகிலேஷ் கிரி, டைசல் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சிஹிரோ அவோகி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.